# SLITA

## இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்

### கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடம் — நூலகர் (தரம் — II)

எமது நிறுவனம் புடவை மற்றும் ஆடை தொழில்துறைக்காக பயிற்சி அளித்தல், ஆலோசனை சேவை, ஆய்வுகூட செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப சேவை வழங்கும் அரசின் சட்டரீதியான சபையாகும். அதன் மேலுள்ள பதவிக்காக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வி தகைமை:**

***வெளிவாரி அபேட்சகர்கள் :***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட நூலக விஞ்ஞானம்/ தகவல் விஞ்ஞானம் தொடர்பில் பட்டம்

***உள்ளக அபேட்சகர்கள் : (கீழுள்ள 1 அல்லது 2)***

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.
2. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) தரம் II பதவியில் (MA 1-2) குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி)

**சம்பள அளவு : ரூபா 43,355/- 10 x 755 – 18 x 1135 – 71,335/- *(JM 1 – 2 - 2016)***

*** அரசின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் மற்ற சட்டரீதியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.**

மேல் குறிப்பிடப்பட்ட பதவிக்கு தொடர்புடைய தகைமை, அனுபவம் மற்றும் தொழில் சார்ந்த வேறு தகைமைகளை (உறுதி செய்வதற்கு குறித்த ஆவணங்களின் பிரதிகள் தேவை) மற்றும் சுயவிபரக்கோவை அடங்கிய முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உங்களது விண்ணப்பப் படிவத்தை 2025.02.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு, உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயருடன் (non-related referees), கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்கு பொருத்தமான விண்ணப்பங்கள் மாத்திரம் அழைக்கப்படுவதோடு, இறுதி முடிவு நிர்வாகக் குழு வசமானது.)

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்**
**கந்தவல வத்த, இலக்கம் 02, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை.**
**தொ. இலக்கம்: 011 2632406 இணையதளம்: www.slita.ac.lk**